ஈழத்தமிழர் திரைப்படச் சங்கம் ● பிரான்ஸ்
Lumière Image Franco ● Tamil

## ஊடக அறிக்கை

ஈழத்தமிழர் திரைப்படச் சங்கம் – பிரான்ஸ்
திகதி: 19.04.2025

ஈழத்தமிழர்களாகிய நாம் ஒரு தேசிய இனமாக விளங்குகிறோம். எமது சொந்த மொழி, வரலாறு, பண்பாடு மற்றும் தனித்த அடையாளங்களுடன் உலகெங்கும் வாழ்ந்து வருகின்றோம். பல தசாப்தங்களாக இன விடுதலைக்காகப் போராடி வரும் நாம், எம்மீது திணிக்கப்பட்டுள்ள அனைத்து இன அழிப்பு முயற்சிகளுக்கும் எதிராகக் குரல் கொடுத்து வருகிறோம்.

இந்த நிலையில், இம்மாதம் 30ஆம் திகதி பிரான்ஸ் நாட்டின் திரையரங்குகளில் வெளியாகவிருக்கும் 'ஈழம் – Little Jaffna' எனும் திரைப்படம், எமது வரலாறு, புலம்பெயர் வாழ்க்கை மற்றும் விடுதலைப் போராட்டத்தை தவறாகவும், திரித்தும் சித்தரிக்கின்றது. இத்திரைப்படம் எமது இனத்தைக் குற்றவாளிகளாகவும், கொலைகாரர்களாகவும், சட்ட விரோத செயல்பாடுகளில் ஈடுபடும் மாபியாக்களாகவும், இளைய தலைமுறையினரை வன்முறையாளர்களாகவும் தவறாகப் படம்பிடித்துள்ளது. இது உண்மைக்கு முற்றிலும் மாறானதாகும்.

2025 பெப்ரவரி 14ஆம் திகதி, பாரிசில் உள்ள அனைத்துத் தமிழ் சிவில் கட்டமைப்புகளின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களுடன் இத்திரைப்படத்தின் தவறான சித்தரிப்பு மற்றும் சமூகத் தாக்கம் குறித்து ஆழமான கலந்துரையாடல் நடத்தப்பட்டது. இக்கலந்துரையாடலின் விளைவாக, இத்திரைப்படம் எமது சமூகத்தின் மீது வெறுப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை உறுதியாக நம்புகிறோம். மேலும், இது பிரான்ஸில் வாழும் தமிழர்களின் பாதுகாப்பு மற்றும் சமூக நலன்களுக்கு எதிரானதாக அமையக்கூடும்.

எனவே, 'ஈழம் – Little Jaffna' திரைப்படத்தை முழுமையாகப் புறக்கணிக்குமாறு எமது சமூகத்தினருக்கு அறிவுறுத்துகிறோம். மேலும், இத்திரைப்படத்தின் தயாரிப்பாளர்கள் மற்றும் படக்குழுவிற்கு எமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்து, தேவையான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவை அனைத்து ஊடகங்கள் மற்றும் சமூக ஆர்வலர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

தலைவர்
(இசக்கிமுத்து வதனன்)

செயலாளர்
(துளபன் சோதிலிங்கம்)


**தலைவர்**
திரு. இசக்கிமுத்து வதனன்

**செயலாளர்**
திரு. சோதிலிங்கம் துளபன்

**பொருளாளர்**
திரு. என்.எஸ். ஜனா

**உப தலைவர்**
திரு. சின்னராசா றீகன்

**உப செயலாளர்**
திரு. வேல்முருகன் கெங்கேஸ்வரன்

**PRESIDENT**
VATHANAN ISAKKIMUTHU

**SECRETARY**
SOTHILINGAM THULAPAN

**TREASURER**
N.S.JANA

**VICE PRESIDENT**
SINNARASA RIAN

**JOINT SECRETARY**
VELMURUGAN GENGESWARAN

l'association n° W751261119

CONTACT :
06 61 59 86 52
06 79 46 22 08

e Mail: etts.lift@gmail.com